1990 மார்ச் 31]

இராமிய நூற்பு நிலையம்.

* 5372—திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் திம்மராஜபுரத்திலும் மற்றும் ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா இடையர்காடு கிராமத்திலும் பெண்களுக்கான கிராமிய நூற்பு நிலையம் அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வ.உ.சி. மாவட்டம் திம்மராஜபுரம் மற்றும் இடையர்காடு கிராமங்களில் கிராமிய நூற்பு நிலையங்கள் அமைக்கின்ற பரிசீலனை அரசினிடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய நிலங்கள் பாதிப்பு.

* 893—திரு. ஆ. நடராசன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கேரள மாநிலம் வாளையாறு பகுதியிலுள்ள மலபார் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையிலுள்ள தூசியால் கோவை மாவட்டம், மாவுத்தம்பதி கிராமத்திலுள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கேரள மாநிலம் வாளையாறு பகுதியிலுள்ள மலபார் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையில் உள்ள தூசியால் கோவை மாவட்டம், மாவுத்தம்பதி கிராமத்திலுள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக பொது மக்களிடமிருந்து எந்தவிதமான முறையீடுகளும் வரவில்லை.

(ஆ) எனினும் இதுபற்றி கேரள அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. கேரளா மாசு கட்டுப்பாட்டு வாரியம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.